Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 20, 2023

புதன்கிழமை டிசெம்பர் 20, 2023 | ஒளி: 09 கதிர்: 153 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# 35 பவுண் மாயம் சுட்டி கபுவா கைது



வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் விகாரைக்கு காணிக்கையாக வைக்கப்பட்டிருந்த 38 பவுண் தங்கத் தகடுகளைத் தவறவிட்டமைக்காக ஆலயத்தின் பாதுகாவலராக இருந்த சுட்டி கபுவா கைது செய்யப்பட்டுள்ளார் என கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

முப்படை மற்றும் பொலிஸாரின் ஆதரவுடன் மேல்மாகாணத்தில் விழிப்புணர்வு, கண்காணிப்பு நடவடிக்கை

அரச நிறுவனங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பரவும் டெங்கு நோய்

2024 ஜனவரி முதல் வாரத்தில் இந்தத் திட்டம் தொடர்பான முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்கு யோசனை



## டெங்கை ஒழிப்பதற்கு
# 'வொல்பெக்கியா' வருகிறது

கொழும்பு வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குப் பங்களித்த வொல்பெக்கியா (Wolbachia) விசேட டெங்கு ஒழிப்பு திட்டத்தினை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் டெங்கு பரவல் அதிகமாகக் காணப்படும் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்துமாறு தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அதற்காக இராணுவம் மற்றும் பொலிஸாரின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்த அவர், அரச நிறுவனங்களில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய அரச நிறுவனங்களுக்கு பொறுப்புகள் வழங்குமாறும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (18) இடம்பெற்ற டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலை குறித்த முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

தொடர்ச்சி P2

# 2000 சிறுமிகள் தாயாகினர்



இவ்வருடம் 2000 சிறுமிகள் தாயாகியுள்ளனர் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும்,பொலிஸாரின் அறிக்கையின்படி கடந்த நவம்பரில் பத்து சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளது தெரியவருவதாக அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிறு வயதிற்குட்பட்ட பெண்கள் தாயாக மாறுவது சமூக மற்றும் சட்டப் பிரச்சனையாக மாறியுள்ளதாகத் தேசிய குழந்தைகள் நல ஆணையம் தெரிவித்துள்ளது.

# ID புகைப்படம் ரூ.400



தேசிய அடையாள அட்டை புகைப்படங்களைச் செயலாக்குவதற்கான கட்டணத்தைத் திருத்தியமைக்கும் அதிவிசேட வர்த்தமானியை பொது பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

புதிய உத்தரவின்படி, டிஜிட்டல் படங்களைப் பதிவேற்றம் செய்யப் பதிவு செய்யப்பட்ட புகைப்படக் கலைஞர்கள் இனி அதிகபட்சமாக ரூ. 400 அறவிடலாம். பதிவு செய்த பிறகு புதிய அடையாள அட்டை அல்லது நகல்களுக்கு விண்ணப்பிக்கும் நபர்களுக்கு இந்தக் கட்டணம் பொருந்தும்.

2016 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் இல் 150 ரூபாயைப் பெறும் அறிவித்தலை ரத்து செய்து பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் இந்த அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# 'டீஜே' இசைக்குப் பின்னர் தள்ளாடிய இருவருக்கு எச்சரிக்கை

ஆ.ரமேஸ்

இராகலையில் இயங்கும் பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர்கள் இருவர் இராகலை பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட சம்பவம் திங்கட்கிழமை (18) இடம்பெற்றுள்ளது.

ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ள க.பொ.த.உயர் தரம் பரீட்சையில் தோற்றவுள்ள இரண்டு மாணவர்களே இவ்வாறு பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலையிலிருந்து உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குத் திங்கட்கிழமை (18) பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# சீனாவில் பாரிய நிலநடுக்கம்: 116 பேர் பலி: 200 பேர் காயம்

முழுச் செய்தி P6

## தேர்தல் கருத்துக்களை பெறுவது
# பொங்கலுக்கு ஒத்திவைப்பு

தேர்தல் சட்டத் திருத்தத்திற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, மக்கள் கருத்துக்களைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை ஜனவரி 15ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

அதன்படி, பொது மக்கள், அரசியல் கட்சிகள், அமைப்புகள் மற்றும் தேர்தல் சட்டத்தில் ஆர்வமுள்ள கட்சிகள் sec.coi@presidentsoffice.lk பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு ஜனவரி 15 அல்லது அதற்கு முன் அல்லது செயலாளர், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்குப் பரிந்துரைகளை வழங்கலாம்.

தொடர்ச்சி P2



# சீனக் கப்பல் நுழைய மறுப்பு

இலங்கையின் கடல் எல்லைக்குள் ஆய்வுகளை மேற்கொள்ள முயன்ற சீன ஆய்வுக் கப்பலுக்கு இலங்கை தரப்பில் அனுமதி மறுத்துள்ளதாக மூத்த அரசாங்க அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகி உள்ளன.

மற்றொரு சீன அதிநவீன ஆராய்ச்சிக் கப்பல் Xiang Yang Hong 3, இலங்கை மற்றும் மாலைதீவு உள்ளிட்ட இந்தியப் பெருங்கடல் பகுதியில் அடுத்த ஆண்டு ஜனவரி முதல்

தொடர்ச்சி P2

# தம்மிக்க செய்தியை மறுத்தது மொட்டு

தாமரை மொட்டை சின்னமாகக் கொண்ட, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இலங்கையின் பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேராவை இணைக்கும் செய்திகளை முற்றாக மறுத்துள்ளது.

2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக தம்மிக்க பெரேராவை பெயரிட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், அறிக்கையொன்றை வெளியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்த செய்தியை மறுத்துள்ளதுடன், கட்சியினால் அத்தகைய தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை என தெளிவுபடுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

# தானியங்கி ஆணுறை இயந்திரம் மாயம்

எம்.றொசாந்த்

எய்ட்ஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில், நாடாளாவிய ரீதியில் தானியங்கி ஆணுறை வழங்கும் இயந்திரங்கள் தெரிவு செய்யப்பட்ட சில பொது இடங்களில் பொருத்தப்பட்டது.

அவ்வாறு யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வளாகத்தில் பொருத்தப்பட்டு இருந்த தானியங்கி ஆணுறை வழங்கும் இயந்திரம் காணாமல் போயுள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



# "போதகர் விடயத்தில் CID ஒழுங்கீனம்"

ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் அவரது மனைவியின் வங்கிக் கணக்குகளில் 12.26 பில்லியன் ரூபாய் உள்ளதுடன் பௌத்தம் மற்றும் பிற மதங்களுக்குக் களங்கம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் CID சட்டவிரோதமான முறையில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக சட்டமா அதிபர் திங்கட்கிழமை (18) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# 2 சேவைகள் 'அத்தியாவசியம்'



மின்சாரம் வழங்கல், பெற்றோலியப் பொருட்கள் விநியோகம் மற்றும் எரிபொருளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் படி, மின்சார விநியோகம், பெற்றோலிய பொருட்கள் மற்றும் எரிபொருளின் விநியோகம் அல்லது விநியோகம் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக கருதப்படுகின்றன.

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘வொல்பெக்கியா’ வருகிறது



சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல மற்றும் ஜனாதிபதியின் தேசியப் பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் இச்சந்திப்பு நடைபெற்றது. தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுடன் கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பில் இங்கு மதிப்பாய்வு செய்யப்பட்டது.

குறிப்பாக மேல்மாகாணத்தில் டெங்கு பரவல் அதிகரித்துக் காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை மையப்படுத்தி, கடந்த காலங்களில் டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

முப்படை மற்றும் பொலிஸாரின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளின் காரணமாக டெங்கு பரவல் கணிசமான அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அந்தத் திட்டங்களை மேற்கொண்டு செயல்படுத்துவதன் மூலம் மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

மத்திய மாகாண சுகாதார அதிகாரிகள் நிகழ்நிலை (Zoom) தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த சந்திப்பில் கலந்து கொண்டதுடன், அரச நிறுவனங்கள், பாடசாலைகள், மத ஸ்தலங்கள், பொது இடங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கண்டி மற்றும் மாத்தளை மாநகர சபை எல்லைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் கணிசமான அளவில் காணப்படுவது தொடர்பில் குறிப்பிட்ட மத்திய மாகாண சுகாதார அதிகாரிகள் நிலைமையைக் கட்டுப்படுத்த கொழும்பு மாநகர சபையின் ஆதரவுடன் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மத்திய மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பில் மத்திய மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவொன்று மாகாணத்தின் அனைத்து சுகாதார மற்றும் வைத்திய அதிகாரி பிரிவுகளையும் உள்ளடக்கி அனைத்து கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். டெங்கு ஒழிப்பு திட்டத்தை மேலும் உத்வேகத்துடன் முன்னெடுத்து பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அனைத்துப் பாடசாலைகளுக்கும் அறிவித்துப் பெற்றோர்களின் பங்களிப்புடன் பாடசாலை வளாகத்தைச் சுத்தம் செய்து புகைப்படங்களுடன் அறிவிக்குமாறு சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குமாறும் சாகல ரத்னாயக்க பணிப்புரை விடுத்தார். 2024 ஜனவரி முதல் வாரத்தில் இந்தத் திட்டம் தொடர்பான முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்யவும் யோசனை முன்வைத்தார்.

## ‘டீஜே’ இசைக்குப் பின்னர் தள்ளாடிய இருவருக்கு எச்சரிக்கை

இதையடுத்து மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ‘டீஜே’ இசை நிகழ்வும் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இரு மாணவர்கள், போதை தரக்கூடிய பாக்கை உண்டு தள்ளாடிய நிலையில் கூச்சலிட்டு ஆடியுள்ளனர்.

இதை அவதானித்த சக மாணவர்கள் பாடசாலை அதிபரிடம் முறையிட்டுள்ளனர். இவ்விரு மாணவர்களையும் அழைத்து விசாரித்து இவர்கள் தொடர்பில் இராகலை பொலிஸாருக்கும் வீட்டாருக்கும் அறிவித்துள்ளார்.

பாடசாலைக்கு வந்த பொலிஸார் மாணவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு பாடசாலை அதிபர் விடுத்த முறைப்பாட்டுக்கு இணங்க விசாரணையை முன்னெடுத்துப் பெற்றோர்களை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து மாணவர்கள் தொடர்பில் சம்பவத்தை விளக்கியுள்ளனர்.

இதையடுத்து மாணவர்களின் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்தி அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு அவர்களை பொலிஸார் பெற்றோர்களிடம் ஒப்படைத்து விடுவித்துள்ளனர்.

## பொங்கலுக்கு ஒத்திவைப்பு

இதன்படி, தேர்தல் சட்டத்தின் திருத்தம், எண். 21, SEMA கட்டிடம், ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 (தேர்தல் திருத்தங்கள்) அல்லது குறிப்பிடப்பட வேண்டும். பொதுமக்கள் கருத்துக்களை சமர்ப்பிப்பதை இம்மாதம் 15ஆம் திகதியுடன் முடிப்பதற்கு ஆணைக்குழு முன்னர் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## “போதகர் விடயத்தில் CID ஒழுங்கீனம்”

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) சட்டத்தின் நிபந்தனைகளை மீறிய குற்றச்சாட்டில் விசாரணைகள் நிலுவையில் உள்ள கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவுக்கு எதிராக போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தாக்கல் செய்த ரிட் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இது தெரியவந்துள்ளது.

இந்த ரிட் மனு மீதான உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் டிசெம்பர் 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இந்த விடயம் சிரேஷ்ட நீதியரசர் டி.என்.சமரக்கோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஷமிந்த விக்கிரம, விண்ணப்பத்தை அதன் தகுதிகளுக்குள் செல்லாமல் ஆரம்பத்திலேயே நிராகரிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அவர் பல ஆரம்ப ஆட்சேபனைகளை எழுப்பினார்:

ரிட் மனுவானது டிசெம்பர் 18 விசாரிக்கப்பட டிசெம்பர் 14 தாக்கல் செய்யப்பட்டது. பதில்களைத் தயாரிப்பதற்கு குறைந்தபட்சம் மூன்று வேலை நாட்களைக் கூட கட்டாயமாக வழங்கவில்லை, , மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட விதிகளின் படி ஆவணங்களை பிரதிவாதிகளுக்கு வழங்கியதற்கான ஆதாரத்தை இணைக்கவில்லை என அவர் தெரிவித்தார் .

மனுவில் தேவையான தரப்பினரின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை, குறிப்பாக இந்த வழக்கில் முறைப்பாட்டாளர்களாக இருந்த தலையீட்டு மனுதாரர்கள் குறிப்பிடப்படவில்லை என்று அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

மனுதாரர் சலுகை பெற்றவர் அல்ல என்றும், சட்டம் அவருக்கும் சமமாகப் பொருந்த வேண்டும் என்றும் மூத்த அரச சட்டத்தரணி விக்கிரம நீதிமன்றத்தில் வலியுறுத்தினார். ஜெரோம் பெர்னாண்டோவை “நீதிமன்றத்தை" இழிவுபடுத்த அனுமதிக்க வேண்டாம் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

சிரேஷ்ட அரச சட்டத்தரணி முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனைக்கு தம்மை இணைத்துக்கொண்ட இடையீட்டு மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி லக்மினி வருசவிதான, தமக்கு தரப்பினர் வழங்கப்படவில்லை எனவும், விண்ணப்பம் தொடர்பில் நேற்று (18) காலை வரை தங்களுக்கு நோட்டீஸ் கிடைக்கப்பெறவில்லை எனவும் ஆட்சேபனைகளை மீண்டும் வலியுறுத்தினார்.

மனுதாரர் எதிர்பார்க்கும் தீர்ப்பைப் பெறக்கூடிய முறையில் (forum shopping) ஈடுபட்டு, வழக்கைத் தொடர நீதிமன்றம் முடிவு செய்தால், ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய விரும்புவதாக வலியுறுத்தினார்.

மேலும்,ஜெரோம், உடனடி விண்ணப்பத்தில், குறிப்பாக அவரால் தாக்கல் செய்யப்பட்ட மற்ற வழக்குகள் தொடர்பாக, உடனடி விண்ணப்பத்தில் பொருள் மற்றும் தொடர்புடைய உண்மைகளை மறைத்துவிட்டதாக மீண்டும் வலியுறுத்தினார்.

ஆட்சேபனைகளுக்குப் பதிலளித்த மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா, forum shopping எதுவும் இல்லை, மனுதாரரின் அறிக்கை ICCPR ஐ மீறவில்லை, அவர் தலைமறைவாகவில்லை மற்றும் மனுதாரர் பணமோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்படவில்லை என்றும் கூறினார்.



## சீனக் கப்பல் நுழைய மறுப்பு

மே வரை ஆய்வுகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த ஆய்வுக்கான அனுமதியை இலங்கை மற்றும் மாலைதீவுகளிடம் இருந்து சீனா முறைப்படி கோரியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், இந்திய ஊடகம் ஒன்றின் அண்மைய அறிக்கையின்படி,

சீன கப்பலின் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு இந்தியா தனது கடுமையான ஆட்சேபனையைப் பதிவுசெய்துள்ளது, இரு தீவு நாடுகளையும் சீன கப்பல் நுழைவதை தடுக்குமாறு வலியுறுத்துகிறது.

Xiang Yang Hong 03 கப்பல் தற்போது தென் சீனக் கடலில் உள்ள Xiamen கடற்கரையில் இருப்பதாகவும், அனுமதியைப் பெற்ற பிறகு மலாக்கா வழியாக இந்த நாடுகளுக்குச் செல்லும் என்றும் அது தெரிவித்துள்ளது.

விஞ்ஞான ஆய்வு என்ற போர்வையில் உளவுத்துறையைச் சேகரிக்கும் இந்த ஆராய்ச்சி பணியை சீனா பயன்படுத்துவதாக இந்திய ஊடகங்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.



10,000 வேலைவாய்ப்புகள்

## 50 பேர் இஸ்ரேல் பயணமாகினர்

இஸ்ரேலிய விவசாயத் துறையில் வேலைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது குழு திங்கட்கிழமை (18) இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இஸ்ரேலுக்கு புறப்பட்டதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (SLBFE) தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த குழுவில் 30 பேர் சேர்க்கப்பட்டனர். இருபது பேர் கொண்ட மற்றுமொரு குழு செவ்வாய்க்கிழமை (19) காலை இஸ்ரேல்க்கு புறப்பட்டது,

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு திங்கட்கிழமை (18) நடைபெற்ற விழாவில் முதல் தொகுதி தொழிலாளர்களுக்கான விமான பயணச்சீட்டுகள் அமைச்சரால் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உடன்படிக்கையின் பிரகாரம், அடுத்த சில வாரங்களில் 10,000 தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு செல்ல முடியும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த வேலைகளுக்காக எந்த தரப்பினருக்கும் பணம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். எனவே, வெளிநாடுகளுக்குச் சென்ற பிறகு, இந்த வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு யாராவது பணம் கொடுத்தது கண்டுபிடிக்கப்பட்டாலும், பணம் செலுத்தியவர்களை திருப்பி அனுப்புவது குறித்து இரு அரசுகளும் உடன்பாடு எட்டியதால், அவர்கள் மீண்டும் அழைத்து வரப்படுவார்கள்.

மேலும், கட்டுமானத் துறையில் வேலை வாய்ப்புகளுக்காக 2,000 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

## 35 பவுண் மாயம் சுட்டி கபுவா கைது

சந்தேக நபர் பொலிஸில் செவ்வாய்க்கிழமை (19) சரணடைந்ததன் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் சுமார் இரண்டு மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் மர்மமான முறையில் மரணமடைந்ததாகக் கூறப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரான மத்துமகே லசந்த சந்தன பெரேரா என்ற அங்கொட லொக்காவின் மனைவி அபேசிங்க நிசன்சலா, அங்கொட லொக்காவின் வயதுக்கு ஏற்றவாறு தனது மகனின் பெயரில் 38 பவுண் எடையுள்ள தங்கத் தட்டையும் காணிக்கை செலுத்தியுள்ளார்.

அவ்வாறு காணிக்கையாகச் செலுத்தப்பட்ட தங்கத் தட்டு சுமார் இரண்டு வாரங்களின் பின்னர் சுட்டி கபுவா அறையில் வைக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## ID புகைப்படம் ரூ.400

ஆட்பதிவுத் திணைக்களத்தின் இ-புகைப்பட மென்பொருள் அமைப்பில் டிஜிட்டல் படங்களைப் பதிவேற்றும் செயல்முறையை நெறிப்படுத்துவதே இந்த மாற்றத்தின் நோக்கமாகும் என்று அமைச்சர் எடுத்துரைத்தார்.

## தம்மிக்க செய்தியை மறுத்தது மொட்டு

மேலும், அத்தகைய முடிவுகளை எடுக்க கட்சியின் செயற்குழு கூட்டப்பட வேண்டும் என்றும், கடந்த சனிக்கிழமை (டிசெம்பர் 15) முதல் அந்தக் குழு கூடவில்லை என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூறியுள்ளது.



## ”65 வயதில் ஓய்வு பெறுவேன்”

வி.ரி. சகாதேவராஜா

இலங்கை தமிழரசு கட்சியின் காரைதீவு பொதுச் சபை உறுப்பினர்களின் சந்திப்பு, காரைதீவு தமிழரசுக் கட்சி கிளைத்தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் கட்சி கிளைப் பணிமனையில் திங்கட்கிழமை (18) நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் இரா. சாணக்கியன் மற்றும் இளைஞர் அணி துணைத் தலைவர் அருள். நிதாஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் இலங்கைத் தமிழர் கட்சியின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன், “எனக்கு இன்னும் இரண்டு மாதங்களில் 60 வயதாகிறது 65இல் நான் ஓய்வு பெறுவேன்” என்றார்.

## புலம்பெயர்ந்தோர் என்பதால் மட்டும் இனவாதிகள் என்றோ இலங்கை எதிர்ப்பாளர்கள் என்றோ அர்த்தப்படாது

புலம்பெயர் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால் ஒருவர் இனவாதியாகவோ இலங்கைக்கு எதிரானவராகவோ இருக்கப்போவதில்லை என தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

புலம்பெயர்ந்தவர்களை இந்நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் இணைத்துக் கொண்டு, அவர்களின் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டியது அவசியம் எனவும் அந்த முதலீடுகளை ஈர்ப்பதற்கான இடமாக இலங்கையை மாற்றியமைக்க வேண்டுமெனில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டியது அவசியமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (18) நடைபெற்ற தேசிய குடிபெயர்ந்தோர் தின நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “இன, மத பேதமின்றி வேறு நாடுகளில் வசிக்கும் எந்தவொரு இலங்கையரும் புலம்பெயர்ந்தவர்கள் என்ற வரையறைக்குள் அடங்குவர். கடந்த காலங்களில் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு இடையில் வேறுபாடுகள் தோற்றுவிக்கப்பட்டன.

நாட்டின் அபிவிருத்திக்கு அவர்கள் பங்களிப்புச் செய்ய விரும்புகின்ற போதும், அதிகாரத்துவ தடைகள் மற்றும் அவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்றார்.



## குத்தகை விவகாரத்தில் கத்திக்குத்து:
# ஒருவர் காயம்; நால்வர் கைது

ஆ.ரமேஸ்

குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணியை மீளவும் ஒப்படைக்கவேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்த கிருஷ்ண குமார் (வயது 48) என்பவர் சனிக்கிழமை (16) இரவு கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம், நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒலிபண்ட தோட்டத்தில் இடம்பெற்றுள்ளதுடன், கத்திக்குத்துக்கு இலக்கான நபர், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த நபர், குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கைதுசெய்யப்பட்ட நால்வரும் ஒலிபண்ட தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் என கூறப்படுகின்றது.

ஒலிபண்ட் தோட்டம் கீழ் பிரிவுக்குரிய, இலக்கம் 05 தேயிலை மலையில் 5 ஏக்கர் நிலத்தைத் தனி நபர் ஒருவருக்கு, குத்தகை செய்வதற்குத் தோட்ட நிர்வாகம் குத்தகைக்கு வழங்கியிருந்து குத்தகை காலம் முடிந்த நிலையில், விவசாய நிலத்தைத் தோட்ட நிர்வாகத்துக்கு மீளக் கையளிப்பதில், குத்தகை தாரருக்கும், தோட்ட நிர்வாகத்துக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில், நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், வழக்கு விசாரணையின் நிறைவில், குத்தகை நிலத்தைத் தோட்ட நிர்வாகத்துக்கே கையளிக்கப்படவேண்டுமென நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அந்த நிலத்திலிருந்து விலகிச் செல்வதற்கும், விவசாயப் பொருட்களை அகற்றுவதற்கும் குத்தகைக்காரருக்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும், அந்த நிலத்தில் தோட்ட நிர்வாகம் தேயிலைச் செடிகளை பயிரிட்டு ஒருவரை காவலில் ஈடுபடுத்தியுள்ள நிலையிலேயே இந்த கத்திக்குத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, இச்சம்பத்துடன் தோட்ட நிர்வாகமும், தோட்ட அதிகாரியும் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறி, செவ்வாய்க்கிழமை (19) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி
# நால்வருக்கு பிணை

ஆர்.ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தினமான நவம்பர் 27ஆம் திகதியன்று இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் கலந்துகொண்டபோது கைதுசெய்யப்பட்ட நான்கு பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

23 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீர பிணையில், வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவன் உட்பட நான்கு பேர் பிணையில் செவ்வாய்க்கிழமை (19) விடுக்கப்பட்டுள்ளனர்.



கைது செய்யப்பட்ட நால்வருக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வாழைச்சேனை பொலிஸாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலைசெய்யுமாறு வலியுறுத்தியிருந்தனர்

அத்துடன், இவர்களது விடுதலை தொடர்பில் ஆரம்பம் முதல் இறுதி வரை மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப்புக்கள் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்த வழக்கு ஜனவரி 1ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

# பார்மிஸ் லங்கா 50 வருட பூர்த்தி



மொரட்டுவை– பார்மிஸ் லங்கா நிறுவனத்தின் 50 வருட பொன் விழாவைக் கொண்டாடும் வகையில் மொரட்டுவ பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கிறிஸ்மஸ் விழாவும், விசேட சமூக சேவையாளர்களைப் பாராட்டும் நிகழ்வும் அண்மையில் மொரட்டுவ இம்மானுவேல் தேவி மதுர பிரதான மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வின்போது, 45 வருட ஊடகப் பணியை நிறைவு செய்த மொரட்டுவை, ஊடகவியலாளரான கபில பந்துசேனவை, மொரட்டுவை பிரதேச செயலாளர் இசங்க டி உடவத்த மற்றும் பார்மிஸ் லங்கா பொது முகாமையாளர் கிளாரன்ஸ் ஐ.மென்டிஸ் ஆகியோர் சிறப்பு பரிசில் வழங்கி கௌரவித்துள்ளனர்.

## 15 வயதான மாணவி துஷ்பிரயோகம்:
# மாணவர்கள் இருவர் உட்பட நால்வர் கைது

ஷேன் செனவிரத்ன

கண்டியிலுள்ள பிரதான பெண்கள் பாடசாலை ஒன்றில் கல்விகற்று வரும் 15 வயதான மாணவியான சிறுமியின் நிர்வாண புகைப்படங்களை, இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்வதாக அச்சுறுத்தி, விடுதிக்கு அழைத்துச் சென்று அவ்வப்போது பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில், மாணவர்கள் இருவர், கண்டி தலைமையக பொலிஸ் பிரிவின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவியினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவரும், கண்டியிலுள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களாவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு மாணவர்களில் ஒருவர், சிறுமியான அந்த மாணவியுடன் முதலாவதாகக் காதல் தொடர்பை கொண்டிருந்துள்ளார். அவர், கண்டி இரண்டாவது ராஜசிங்க மாவத்தையில் உள்ள ஒரே உரிமையாளரின் இரண்டு தங்கும் விடுதிகளுக்கு அந்த மாணவியை அவ்வப்போது அழைத்துச் சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

அப்போது, அச்சிறுமியை நிர்வாணப்படுத்தி, புகைப்படங்களை எடுத்துக்கொண்டதுடன், வீடியோவாகவும், இருவரும் உடலுறவில் ஈடுபடுவதையும் பதிவுச் செய்துகொண்டுள்ளார். அந்த காதல் தொடர்பை இடையில் துண்டித்துக்கொண்டுள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே மற்றுமொரு மாணவனுடன், காதல் வயப்படுவதற்காக அந்த சிறுமியான மாணவி, அவருக்குத் தொடர்ச்சியாகக் குறுஞ்செய்திகள் அனுப்பியுள்ளார். இதுதொடர்பில் முதலாவது காதலனுக்கும் தெரிவித்துள்ளார்.

அவரும், அதே தங்குமிட விடுதிக்கு அழைத்துச் சென்று, அச்சிறுமியின் நிர்வாணப்படங்களை தன்னுடைய அலைபேசியில் படம்பிடித்துக்கொண்டார். அத்துடன் வீடியோவாகவும் பதிவுச் செய்துகொண்டார்.

அந்த நிர்வாணப்படங்களை இணையத்தளத்தில், காதலர்கள் இருவரும் பதவியேற்றம் செய்தையடுத்து, அம்மாணவி கல்வி கற்ற பாடசாலைக்கு விவரம் தெரியவந்துள்ளது. உடனடியாக பாடசாலைக்குச் சென்ற மாணவியின் தாய், தனது மகளை அப்பாடசாலையில் இருந்து விலக்கிக்கொண்டார்.

வயது குறைந்த பெண் பிள்ளைக்கு தங்குமிட விடுதியை வழங்கினார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் தங்குமிட விடுதியின் உரிமையாளர் மற்றும் முகாமையாளர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மாவா பாக்குடன் இருவர் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் மாவா பாக்குடன் இரண்டு இளைஞர்கள் திங்கட்கிழமை (18) கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, கொக்குவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை சோதனையிட்டபோது, அவர்களிடம் இருந்து, தலா 50 கிராம் மாவா பாக்கு பொட்டலங்கள் கைப்பற்றியுள்ளதாக



பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து, வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தார் செல்வம்



எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப் பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வசித்து வரும் மக்களை பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் திங்கட்கிழமை (18) மாலை பார்வையிட்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 632 குடும்பங்களைச் சேர்ந்த 2245 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது 4 தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நலன் புரி நிலையங்களுக்குச் சென்று மக்களை பார்வையிட்டு மக்களின் தேவைகளை கேட்டறிந்து மக்களின் அவசர தேவைகளை பூர்த்தி செய்ய உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# T56 தோட்டாக்கள், கஞ்சாவுடன் ஒருவர் கைது



மொனராகலை-சியம்பலாண்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமகிபுர பகுதியில் செவ்வாய்க்கிழமை (18) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 18 T56 தோட்டாக்கள் மற்றும் 20 கி.கிராம் உலர் கஞ்சாவை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் சியம்பலாண்டுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 43 வயதுடைய சமகிபுர பகுதியை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரை சியம்பலாண்டுவ நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குளங்களில் நீர்மட்டம் அதிகரிப்பு

எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான குளங்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழ்வான பிரதேசங்களில் தேங்கியுள்ள மழைநீர் வழிந்தோட முடியாமையினால் பாதைகளில் நீர் தேங்கியுள்ளதுடன் வீடுகளுக்குள்ளும் வெள்ளநீர் உட்புகுந்துள்ளதால் மக்கள் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதுடன் அவர்களின் அன்றாட நிலைமைகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 5 நாட்களில் 10 வீடுகள் சேதம்



காட்டு யானைகளின் அட்டகாசத்தால் அம்பாறை மாவட்டத்தின் பங்தாறதுவ கிராம மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயமாக இப்பிரதேசத்திற்குப் பொறுப்பாகவுள்ள வன விலங்கு பாதுகாப்பு அதிகாரி அஜித் குணரெட்ண தமக்கு வழங்கப்பட்ட வாகனம் பழுதடைந்துள்ள நிலையில் அம்பாறை பிரதேச செயலகத்திடமும் மாவட்ட செயலகத்திடமும் வாகன வசதி செய்து தரும்படி பலமுறை கேட்டும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்ததுடன், மோட்டார் சைக்கிளில் சென்று யானைக்கூட்டத்தைத் துரத்த தமது குழுவால் முடியாதுள்ளது என தெரிவித்துள்ளார்.

விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள இப்பிரதேச மக்கள் அடுத்த போகத்திற்காகச் சேமித்து வைத்திருந்த விதை நெல் அனைத்தையுமே காட்டு யானைகள் உண்டு தீர்த்துள்ளதாகக் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

# அவசரப்படாத அவசர தொலைபேசி எண்களால் பயனேது

நமது நாட்டை பொறுத்தவரையில், அவசர தொலைபேசி (ஹொட்லைன்) எண்களுக்குக் குறைவே இல்லை. மூன்று இலக்கங்களைக் கொண்டவை மற்றும் நான்கு இலக்கங்களைக் கொண்டவை என, இரண்டு வகைகளில் அவசர தொலைபேசி இலக்கங்கள் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்படுகின்றன. அவற்றில் சில எண்கள் இன்னும் செயற்பாட்டில் உள்ளன.

சில அவசர தொலைபேசி இலக்கங்கள் அந்தந்த சந்தர்ப்பங்களில் மட்டுமே செயற்படும், ஏனைய நாட்களில், தூங்கிவிடும் அல்லது அந்தந்த நிறுவனங்களில் கடமையிலிருக்கும் கடமை நேர உத்தியோகஸ்தர்கள் அவை தொடர்பில் கவனம் செலுத்துவதே இல்லை.

இலங்கை பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 நாடு முழுவதிலும் 24 மணிநேரமும் செயற்பாடுகளிலேயே இருக்கும். இதனால், தகவல் கிடைத்தவுடன் துரிதமாகச் செயற்படும் பொலிஸார், பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்கின்றனர். அதோடு, போதைப்பொருள், ஆயுதங்களை கைப்பற்றியுள்ளனர்.

ஏன்? குடும்ப வன்முறைகளையும் தவிர்த்து உயிர்களையும் காப்பாற்றியுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டுவரும் நபர்களையும் கைது செய்துள்ளனர். அந்தளவுக்கு அவசர தொலைபேசி இலக்கம் மிகத் துரிதமாகச் செயற்படுகின்றது.

எனினும், ஒரு சில திணைக்களங்கள், நிறுவனங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட அவசர தொலைபேசி இலக்கங்கள், எப்போதுமே மௌனம் காத்திருப்பது, வெட்கித் தலைகுனியச் செய்துவிடுகின்றது. இது இவ்வாறு இருக்க, அறிமுகப்படுத்தப்பட்ட ஓரிரு நாட்களுக்கு மட்டுமே செயற்பாட்டில் இருந்த இலக்கங்களும் இல்லாமல் இல்லை. இவையெல்லாம் தவிர்க்கப்படவேண்டியவையாகும்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல் மற்றும் ஒடுக்குமுறைகளைக் கையாள்வதற்காக 2024ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் 24 மணி நேர தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் திரன் அலஸ், செவ்வாய்க்கிழமை (19) தெரிவித்துள்ளார்.

நாட்டில் எங்கிருந்தும் எந்த மொழியிலும் பிரச்சினைகளை ஹொட்லைன் இலக்கத்தின் மூலம் தெரிவிக்க முடியும் என்று கூறிய அமைச்சர், பெண் பொலிஸ் அதிகாரிகளால் இயக்கப்படும் இந்த அழைப்பு மையத்தின் மூலம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு மிகவும் நம்பகமான மற்றும் நம்பகமான சேவை வழங்கப்படுகிறது. தனியுரிமை பாதுகாக்கப்பட்ட முறையாகும் என்றும் கூறியுள்ளார்.

நமது நாட்டை பொறுத்தவரையில், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் நாடுகளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. குடும்ப வன்முறைகளுக்குக் குறைவே இல்லை, இதனால், பெண்களும் சிறுவர்களும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இதற்கிடையே பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்கவின் தகவல்களின் பிரகாரம் இவ்வருடம் 2000 சிறுமிகள் தாயாகியுள்ளனர். இது, சமூகத்தில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும். அவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில், புதிய ஹொட்லைன் தொலைபேசி இலக்கம் செயலில் இருக்குமென நம்புகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எவருடனும் முரண்படுதல் இலகுவானது. சில சமயம் இதன் விளைவுகள் விசாலமானது. தேவையற்ற வாக்குவாதங்களால் எவரும் தங்களை மகா புத்திசாலிகள் எனக் கருதலாகாது.

பேசும்போது காரசாரம் மிகையானால் அதைத் துண்டித்த விலகுவதே புத்திசாலித்தனம். எங்களை நாங்களே புத்திசாலி என நிரூபிக்க எண்ணுவதே கோமாளித்தனம். சில சமயம் பிறரை வெல்ல வைக்கப் பின்வாங்குவதுபோல் நடிப்பது நல்லது.

கணவன் உக்கிரமாகப் பேசினால், மனைவி விட்டுக்கொடுத்து விலக வேண்டும். அதேபோல் மனைவி சண்டைபோடும்போது, கணவன் சமயோசிதமாக அப்பால் நகருவதே புத்திசாலித்தனமானது. ஏட்டிக்குப்போட்டியான தர்க்கத்தால் பிரயோசனம் இல்லை.

எல்லோருக்கும் ரோசம், தன்மானம் இருக்கின்றது. அதில் நியாயமும் இருக்கலாம். சில தர்க்கங்களை நிரூபிக்க வேண்டும் என அடம்பிடித்தலாகாது. சமாதானம், சமரசம், மௌனம், அமைதியை உருவாக்கும் எவரையும் பகைத்தலாகாது. இதனால் எவரும் கோழைகள் கிடையாது.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்



எம்.எஸ்.எம்.ஐயூப்

# உண்மையைக் கண்டறியும் முயற்சிகளின் பின்னாலுள்ள உண்மை

இம்மாத ஆரம்பத்தில் இலங்கையின் இனப் பிரச்சினையோடும், நல்லிணக்கத்தோடும், சம்பந்தப்பட்ட இரண்டு முக்கிய விடயங்கள் இடம்பெற்றன. அவ்விரண்டும் ஒரே நாளில் (டிசெம்பர் 8ஆம் திகதி) இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களில் ஒன்றான உலகத் தமிழ் பேரவையின் (Global Tamil Forum - GTF) சில உறுப்பினர்களும் சில முக்கிய பௌத்த பிக்குகளும் நல்லிணக்கத்தை வலியுறுத்தி தயாரிக்கப்பட்ட 'இமாலய பிரகடனம்' என்ற பெயரிலான ஓர் ஆவணத்தை ஜனாதிபதி ரணிலிடமும் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களிடமும் கையளித்தமை முதலாவது நிகழ்வாகும்.

இலங்கையில் இனப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட கடந்த கால சம்பவங்களின் பின்னாலுள்ள உண்மையைக் கண்டறியத் தென் ஆபிரிக்காவில் போல் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்றை நியமிக்க ஜனாதிபதி ரணில் முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்தமை மற்றைய நிகழ்வாகும்.

மிகவும் பொதுப்படுத்தப்பட்ட கருத்துக்களைக் கொண்ட இமாலய பிரகடனம் உலகத் தமிழ் பேரவையும் 'சிறந்த இலங்கைக்கான சங்கத்தினர்' என்ற அமைப்பைச் சேர்ந்த பௌத்த பிக்குகளும் கடந்த ஏப்ரல் மாதம் இமாலய நாடான நேபாளத்தில் கூடி தயாரிக்கப்பட்ட ஆவணமாகும். இதனாலேயே அதற்கு அவர்கள் இமாலய பிரகடனம் என்று பெயரிட்டுள்ளனர். ஜனாதிபதியிடமும் மகாநாயக்க தேரர்களிடமும் அதனை கையளித்த அன்றே கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றின் போது அது பகிரங்க ஆவணமாக வெளியிடப்பட்டது.

அடிக்கடி இலங்கையில் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்களுக்கு அறிக்கைகளை விட்டு, அதனால் சிங்கள மக்களுக்கு நன்கு பரிச்சியமானவரான உலக தமிழ் பேரவையின் முக்கியஸ்தரான சுரேன் சுரேந்திரனும் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

அன்றே உத்தேச உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவைப் பற்றிக் குறிப்பிட்டு அறிக்கையொன்றை வெளியிட்ட ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு 'நிலைமாறு நீதிக்காகவும் மோதலுக்குப் பின்னரான நல்லிணக்கத்துக்காகவுமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நடவடிக்கையாக உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான சயாதீன ஆணைக்குழுவொன்றை நிறுவ இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது' என்று அதில் குறிப்பிட்டு இருந்தது.

இவ்வறிக்கை வெளியிடப்படுதலும் இமாலய பிரகடனம் ஜனாதிபதி மற்றும் மகாநாயக்க தேரர்களிடம் கையளிக்கப்பட்டமையும் ஒரே நாளில் இடம்பெற்றமை தற்செயலா அல்லது முன்னேற்பாட்டில் இடம்பெற்றதா என்பது தெளிவில்லை.

எவ்வாறாயினும், ஜனாதிபதிக்கும் உலகத் தமிழ் பேரவைக்கும் இடையிலான சந்திப்பு பெரிதாக முக்கியத்துவமுள்ளதாகத் தெரியவில்லை. முதலாவது காரணம் இமாலய பிரகடனமானது மிகவும் பொதுப்படுத்தப்பட்ட கருத்துக்களைக் கொண்ட புதிதாக எதனையும் கூறாத ஓர் ஆவணமாகும். இரண்டாவதாக, அச்சந்திப்பை அடுத்து அதன் தொடர்ச்சியாக எதுவும் தீர்மானிக்கப்படவில்லை. குறைந்தபட்சம் அவ்வாறு பேசப்பட்டாகவும் தெரியவில்லை. ஒரு நாள் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வென்றும் மற்றொரு நாள் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்குதல் என்றும் எதேதோ கூறிக்கொண்டு காலத்தைக் கடத்தும் ஜனாதிபதியும் அரசாங்கமும் இதனை முன்னெடுத்துச் செல்வார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

அதேவேளை, இங்கோ அல்லது வெளிநாடுகளிலோ தமிழ் கட்சிகளும் அமைப்புக்களும் இச்சந்திப்பை வரவேற்றதாகவும் தெரியவில்லை. சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் உலகத் தமிழ் பேரவையானது புலம் பெயர் தமிழர்களில் மிகச் சிலரை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறியதோர் அமைப்பு என்பதால் அதனைப் புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ள முடியாது என்ற கூறியிருந்தனர். இவ்வாறான கூற்றுக்களுக்குப் போட்டி மனப்பான்மையும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால், ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு முன்னர் அடிமட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதே அதன் மூலம் தெரிகிறது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவைப் பொறுத்தவரை, அது ஆழ்ந்த பொறுப்புணர்ச்சியுடன் எடுக்கப்பட்ட முடிவாக இருந்தால் அதனை சகலரும் பாராட்டத் தான் வேண்டும். ஆனால் இலங்கையில் நல்லிணக்கம் என்ற விடயத்திலும் குறிப்பாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு என்ற விடயத்திலும் கடந்த காலத்தில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் எவரும் இதனை பாரதூரமாக ஏற்றுக்கொள்வதில்லை.

'நல்லிணக்கம், பரிகாரம் மற்றும் நிலையான சமாதானம் ஆகியவற்றுக்கு வழிகோலும் வகையில் மோதலுக்குப் பின்னரான இலங்கை பிரஜைகளின் மனக்குறைகளைப் பற்றிய உண்மையை நிலைநாட்டுவதே இந்நடவடிக்கை தொடரின் முக்கிய நோக்கமொன்றாகும்' என்று உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவைப் பற்றிய ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், 'கடந்த கால மோதல்களால் ஏற்பட்ட நிலைமைகளிலிருந்து குணமடைவதற்குத் தனி நபர்களுக்கும் சமூகங்களுக்கும் தேவையான உண்மையை அறிவதற்குச் சகல இலங்கையர்களுக்கும் உள்ள மறுக்க முடியா உரிமையை உத்தேச ஆணைக்குழு ஏற்றுக்கொள்கிறது' என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சற்று சிக்கலான இரு கூற்றுக்களாகும். 'மோதலுக்குப் பின்னரான இலங்கை பிரஜைகளின் மனக்குறைகளைப் பற்றிய உண்மையை நிலைநாட்டி' 'மோதல்களால் ஏற்பட்ட நிலைமைகளிலிருந்து குணமடைவது எவ்வாறு என்ற கேள்வி இங்கே எழுகிறது. மோதலுக்குப் பின்னரான மனக்குறைகள் என்றால் மோதல் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களைப் பற்றி மோதல் காலத்துக்குப் பின்னர் ஏற்பட்ட மனக்குறைகளா அல்லது மோதல் காலத்துக்குப் பின்னரான சம்பவங்களைப் பற்றிய மனக்குறைகளா?

'கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட கடந்த கால ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்யவும் ஆராயவும் அமுலாக்கவும் ஆணைக்குழு எதிர்பார்க்கிறது' என்றும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே நோக்கத்துக்காக, அதாவது கடந்த கால ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்யவும் ஆராயவும் அவற்றின் பொருத்தமானவற்றின் அமுலாக்கத்துக்கான பரிந்துரைகளைச் செய்யவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ 2021 ஜனவரி மாதம் உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையில் ஆணைக்குழுவொன்றை நியமித்தார். அதன் பரிந்துரைகளின் சாராம்சத்தையும் நீதியரசர் நவாஸ் கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி ஜனாதிபதி ரணிலிடம் கையளித்தார். அதிலும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவொன்றை நியமிக்கப் பரிந்துரைக்கப்பட்டு இருந்தது.

நவாஸ் ஆணைக்குழு கடந்த கால ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை ஆராய்ந்து இருந்தால் அதையே மீண்டும் செய்வதற்கு மற்றுமொரு ஆணைக்குழு எதற்கு? நீதியரசர் நவாஸ் தம்மிடம் கையளித்த அறிக்கை சாராம்சத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மறந்துவிட்டாரா? அல்லது கடந்த மூன்று தசாப்தங்காளக பல்வேறு ஆணைக்குழுக்களின் அறிக்கைகளுக்கு நடந்ததைப்போல், நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கையும் கிடப்பில் போடப்பட்டதா?

இது இலங்கையில் உண்மையைக் கண்டறிய ஆணைக்குழுவொன்றை நியமிக்க எடுக்கப்படும் முதலாவது முயற்சியல்ல. முன்னரும் பலமுறை இவ்வாறு அறிவிக்கப்பட்டு மறந்து விடப்பட்டுள்ளது. 'நல்லாட்சி' அரசாங்கத்தின் காலத்தில் 2015ஆம் ஆண்டு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஒரு முயற்சி அறிவிக்கப்பட்டது. அவ்வாண்டு செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி அப்போதைய வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர தமது அரசாங்கம் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவொன்றை நியமிக்கப் போவதாக ஐ.நா. மனித உரிமை பேரவையில் கூறினார்.

17 மாதங்களுக்குப் பின்னர் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதியும் அவ்வாறான ஆணைக்குழவொன்றை நிறுவுவதற்கான சட்ட வரைவு இரண்டு மாதங்களில் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதாக அவர் அதே மனித உரிமை பேரவையில் கூறினார். ஆனால், 20 மாதங்களில் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி சட்ட வரைவு அல்ல எண்ணக்கருப் பத்திரம் (concept paper) ஒன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன், அந்த அரசாங்கமும் அதற்கு அடுத்து வந்த கோட்டாவின் அரசாங்கமும் அதனை முற்றாக மறந்துவிட்டது.

இதனை அடுத்து, தற்போதைய அரசாங்கத்தின் கீழ், கடந்த ஜனவரி மாதத்தில் ஜனாதிபதியின் தலைமையிலான நல்லிணக்கத்துக்கான அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைக்கமைய உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுவொன்றைப் பற்றிய மற்றொரு எண்ணக்கருப் பத்திரம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. அந்த எண்ணக்கருப் பத்திரத்தை அங்கீகரிததுவிட்டு வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்‌ஷவும் அவ்விடயத்தைப் பற்றிக் கற்றுக்கொள்ளக் கடந்த மார்ச் மாதம் தென் ஆபிரிக்காவுக்கு ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர். இங்கே படித்துவிட்டு முடிவெடுப்பதற்குப் பதிலாக முடிவெடுத்துவிட்டுப் படிக்கப் போகிறார்கள்.

இப்போது ரணில் விக்ரமசிங்க மீண்டும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவொன்றை நியமிக்கப் போகிறார். தொடர்ச்சியற்ற முறையில் இவ்வாறு நினைத்த நேரமெல்லாம் ஆணைக்குழுக்கள் அமைக்க எடுக்கும் முயற்சிகளின் நேர்மை கேள்விக்குறியாவதைத் தவிர்க்க முடியாது. எனவே, இவையெல்லாம் ஐ.நா. மனித உரிமை பேரவையையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்ற எடுக்கும் முயற்சிகள் என்ற குற்றச்சாட்டையும் மறுக்க முடியாது.

## கடிதங்கள்

### முக்கொம்பனில் காடழிப்பு

கிளிநொச்சி - பூநகரி முக்கொம்பனில் இருந்து தொடர்ச்சியாக மரங்கள் வெட்டப்பட்டு வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாகக் கிராம மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

2010ஆம் ஆண்டு தொடக்கம் முக்கொம்பன் கிராமத்தில் மரங்கள் வெட்டப்படுவது தொடர்கின்றது. பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் முக்கொம்பன் கிராமத்தில் மரங்கள் வெட்டப்பட்டுக் கொண்டு செல்லப்படுவது தொடர்பாகப் பல ஆண்டுகளாக முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

பூநகரி பிரதேசம் உவரடைந்து வரும் நிலையில், முக்கொம்பன், கரியாலைநாகபடுவான், ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளை பாதுகாப்பதன் மூலமே உவர் பரம்பலை கட்டுப்படுத்த முடியும் என்ற நிலைமை காணப்படுமிடத்து, முக்கொம்பனில் காடுகள் அழிக்கப்படும் நிலையில் முக்கொம்பன் கிராமம் விரைவாக உவரடையக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

பூநகரி பிரதேச செயலகம் முக்கொம்பன் கிராம காடுகளை காப்பதில் நடவடிக்கை எடுக்கும் படி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்



ஊழல் எதிர்ப்பு சீர்திருத்தங்களில்

# முன்னேற்றம் இல்லை

## சிவில் சமூக அமைப்புகள் கேள்வி



கடந்த வாரம் சர்வதேச நாணய நிதியத்தின் *(IMF)* நிறைவேற்று சபையானது 48 மாத காலத்திற்கு இலங்கையுடனான விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் முதல் மதிப்பாய்வை நிறைவுசெய்து சிறப்பு வரைதல் உரிமைகளின் *(Special Drawing Rights)* கீழ் இலங்கைக்கு 254 மில்லியனை (சுமார் 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) வழங்க ஒப்புக்கொண்டுள்ள செய்தியை 'பொருளாதார மீட்சிக்கான ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த சிவில் சமூக கூட்டமைப்பான' நாங்கள் கவனத்தில் கொள்ள விரும்புகிறோம். ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவின் *(TISL)* தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட இந்த சிவில் சமூகக் கூட்டமைப்பின் முக்கிய குழுவில் 'வெரிடே ரிசேர்ச்' அமைப்பு மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் *(CPA)*, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு *(PAFFREL)*, சர்வோதய அமைப்பு மற்றும் தேசிய சமாதான பேரவை *(NPC)* ஆகியவை அடங்கும்.

சிவில் சமூகக் கூட்டமைப்பின் முக்கிய குழு என்ற வகையில், இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அரசாங்க மற்றும் ஊழல் எதிர்ப்பு சீர்திருத்தங்கள் இன்றியமையாதவை என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். இலங்கையின் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள ஆட்சியியல் பற்றிய சிவில் சமூக பகுப்பாய்வு அறிக்கைகளில் இந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் முக்கியமானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த சீர்திருத்தங்களுக்கு போதிய முன்னுரிமை வழங்கப்படாவிட்டால், அடுத்த ஐந்தாண்டுகளில் இலங்கை மீண்டும் கடன் நெருக்கடியில் சிக்கிக்கொள்ளும் அபாயம் உள்ளது.

இலங்கையுடனான சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் அரசாங்கத்தின் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுக்கு சிவில் சமூக அமைப்புகள் தங்கள் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும் தற்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலுக்கு எதிரான அடிப்படை உடன்படிக்கைகளைக் கூட அரசாங்கம் இன்னும் நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளதாக சிவில் சமூக அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

உதாரணமாக, IMF திட்டத்தின் கீழ், பாரியளவிலான பொது கொள்முதல் ஒப்பந்தங்கள் மற்றும் பல்வேறு சட்டங்களின் மூலம் வரி விலக்குத் திட்டங்கள் பற்றிய தகவல்களை இணையத் தளத்தின் மூலம் மார்ச் 2023 இறுதிக்குள் வெளியிட அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

ஆனால், இன்னும் அவ்வாறு செய்யவில்லை.

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்துவது உட்பட ஒப்புக் கொள்ளப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதிலும் முறையாகக் கட்டமைப்பதிலும் அரசாங்கம் மெதுவாகவும் முழுமையடையாமல் இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியம் தனது ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் IMF இப்போது இந்த சீர்திருத்தம் தொடர்பான சில செயல்பாடுகளை 'கட்டமைப்பு இலக்குகள்' என மீண்டும் வகைப்படுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் ஒரு இடம் பெறுவதென்றால், ஒப்புக்கொள்ளப்பட்ட ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் புறக்கணிக்க அல்லது சரியாகச் செய்யாமல் இருக்கத் தூண்டுகிறது என்பதை இது வெளிக்காட்டுகிறது. அரசாங்கம் ஒப்புக்கொண்ட செயல்களை 'முன் செயல்கள்' அல்லது 'கட்டமைப்பு வரையறைகள்' என IMF மீண்டும் அதை வகைப்படுத்தும் விதம் சிக்கலாக உள்ளது.

இந்த வகைப்படுத்தலில், நிர்வாகத்துடன் தொடர்புடைய இதுவரை

> **சிவில் சமூகக் கூட்டமைப்பின் முக்கிய குழு என்ற வகையில், இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அரசாங்க மற்றும் ஊழல் எதிர்ப்பு சீர்திருத்தங்கள் இன்றியமையாதவை என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்**

> **இலங்கையுடனான சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் அரசாங்கத்தின் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுக்கு சிவில் சமூக அமைப்புகள் தங்கள் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றன**

நிறைவேற்றப்படாத பல நடவடிக்கைகள் கட்டமைப்பு இலக்குகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

6 மாதங்களுக்கும் மேலாகத் தாமதமாகி வரும் இந்தச் செயற்பாடுகள் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளாக வகைப்படுத்தப்பட்டால் விரைவாகச் செய்யப்பட வேண்டும் என்று அறிவிக்கும் சந்தர்ப்பம் இதனால் தவறிவிட்டது.

அரசாங்கம் தற்போது இலங்கை மக்களுக்காகத் தீர்க்கமான முடிவுகளை எடுத்து வருகிறது. எனவே, சிவில் சமூக அமைப்புகளின் முக்கிய குழுவாக ஊழலுக்கு எதிரான சீர்திருத்த நிகழ்ச்சி நிரலைச் செயல்படுத்துவதற்கு ஆதரவளிக்காது பிடிவாதமான புறக்கணிக்கும் அணுகுமுறையை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பரிசீலனைக்குப் பின்னர் இலங்கையுடன் சர்வதேச நாணய நிதியத்தின் IMF திட்டத்தை விரிவுபடுத்தும்போது, இன்னும் நிறைவேற்றாத நடவடிக்கைகளை முன் நடவடிக்கைகளாக வகைப்படுத்தாதது மற்றும் அனைத்து முக்கியமான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் கட்டமைப்பு இலக்குகளாக வகைப்படுத்தாததன் விளைவுகளைக் கருத்தில் கொள்ளுமாறும் வலியுறுத்துகிறோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் IMF வெளியிடப்பட்ட ஆளுகை பகுப்பாய்வு அறிக்கை மற்றும் எதிர்காலத்தில் IMF திட்டத்தில் அனைத்து சீர்திருத்தம் தொடர்பான செயல்பாடுகளையும் இணைக்க IMF இன் ஆர்வம் குறித்து சிவில் சமூக கூட்டமைப்பின் முக்கிய குழு மகிழ்ச்சியடைகிறது. இதுவரை அரசியல்மயமாக்கல் சீர்திருத்தங்களைப் பொறுத்த வரையில் வரையறுக்கப்பட்ட முன்னேற்றம் மட்டுமே காணப்படுகிறது.

அந்தவகையில், வெளி அழுத்தங்களினால் மட்டும் அல்லாமல், மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் நல்லெண்ணத்துடன் நிர்வாக சீர்திருத்தங்களில் உண்மையான முன்னேற்றத்தைக் காட்டுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

---

றொசில்டா
அன்டன்
திருகோணமலை

# தூரத்துப் பச்சை



ரீங்...ரீங்...ரீங்...தொலைபேசி அலறல் ஜெயா சுயநினைவுக்கு வந்தவனாக 'ஹலோ' என்றவன் மறுமுனையில் 'ராசா ஜெயாம்மா எப்படி கண்ணு இருக்க' இது அம்மாவின் குரல் இன்று மட்டும் நான்கு தடவைக்கு மேல் தொலைபேசி அழைப்பு, மகனின் சுகம் விசாரித்தவள். வீட்டின் தேவையை தொலைபேசியின் ஊடாக நினைவுப்படுத்தினாள். நாட்டில் ஏற்பட்ட கலவரம் தனது குடும்பத்தை மட்டுமன்றி, ஈழத்தில் பலரின் வாழ்க்கையையே தடம் புரள வைத்துவிட்டது. ஜெயா பாடசாலைக்கு போகும்போது, ஒற்றையடி பாதையில் சிவந்த மண் மேட்டில் துவிச்சக்கரவண்டியில் அண்ணாவுடன் ஏறிபோனதும் ஒன்றன் பின் ஒன்றாக ஜெயாவின் நண்பர்களும் புழுதி பறக்க போனதும் நினைவுகளில்... இருமருங்கிலும் வயல் பச்சை பசேல், வயலுக்க நடுவில புளிய மரமும் வேப்பமரமும் எங்களை எவராலும் அசைக்கவே முடியாது என்ற தோரணையில அசைந்தாடும் அழகே தனி. நாட்டில் நடந்த கொடூரங்களை தாங்காத அம்மா என்னையும் அண்ணாவையும் பிரான்ஸ் அனுப்ப ஏற்பாடும் செய்தாள். இருக்கும் சொத்தை எல்லாம் அடமானம் வைத்தாள் நினைத்ததை சாதித்தாள். பிரான்ஸ் வந்து ஏழு மாதம், அண்ணாக்கும் எனக்கும் தமிழ் அண்ணே ஒருவரின் கடையில தான் வேலை 'பாண்டியன்' உணவகத்தில் எப்பவும் சனம்.

தமிழ் சாப்பாடுக்கடை தான் அதனால எப்பவும் நம்மடை ஆட்கள் நிரம்பி வழிவினம் கடையில வேலை செய்ற கண்ணன் அண்ணா பிரான்ஸ் நாட்டுக்கு வந்து இருபது வருடமாம் அன்பான மனைவி, அழகான பிள்ளைகள், வீடு, கார் என நல்ல நிம்மதியான வாழ்க்கையாம் எப்ப பார்த்தாலும் இவர்ட மகிழ்ச்சியை எம்மோடு பகிர்ந்து கொள்வதில் அவருக்கு அப்படியொரு அலாதி பிரியம்.

'நாமளும் இந்த நிலமைக்கு வர இருபது வருடமாகும் என்ன அண்ணே' சலித்துக்கொண்டே பெருமூச்சை விட்டான் ஜெயா 'கமலன் அண்ணாவை எங்க இன்று காணோம்' 'அவருக்கு குளிர் காலம் என்றாலே வருத்தம் தான்' தேவா அண்ணா சொல்லிக்கொண்டே இட்லி தட்டில் மாவை ஊற்றினார். காலை ஐந்து மணிக்கு வீடிலிருந்து வேலைக்கு புறப்பட்டால் இரவு எட்டு மணிக்குத்தான் வீட்டிற்கு போகலாம்...

கால் வலி, உடம்பு வலி எல்லாம் ஒருபக்கம் இருக்க குளிருக்காக டிசேர், அதற்கு மேல் ஒரு ஜக்கட், அதற்கு மேல் ஒரு துண்டு, காதை மறைக்க தலைக்கு அணியும் தொப்பி, கைக்கு குளிர் ஏறாதிருக்க கையுறை, காலுறை சப்பாத்து அப்பப்பா இவ்வளவு உடுப்பையும் உடுத்தி ஒவ்வொரு நாளும் நாம் படும் பாடு இருக்கே வார்த்தையால் சொல்ல முடியாது. குளிர் காலத்தில் உதடு வெடிக்கும், கையில் தோல் உரியும் சில நேரம் இரத்தமும் வரும் குளிர் தேசத்தின் துயர் எம் இளமையை, துள்ளித் திரிந்த காலத்தை, உறவுகளை, அப்பா அம்மாவின் மடியை, நண்பர்களுடன் திரிந்த காலத்தை எல்லாம் யுத்தம் என்கின்ற அரக்கன் சீரழித்து சின்னாபின்னமாக்கிட்டான்.. நம் இனிமையான வாழ்க்கையை தொலைத்து விட்டோம்.

ஜெயா நித்தமும் தாயத்தின் நினைவுகளுடனே பயணிப்பான். வேலை செய்து கொண்டே தனது கடந்தகாலத்தைப் பற்றிய இனிமையை நினைக்க தவறுவதில்லை.

வாரத்தில் ஒரு நாள் செவ்வாய்க்கிழமை விடுமுறை கமலன் அண்ணாவை போய் பர்க்கனும்.பாவம் நல்ல அண்ணா ஊரில இரண்டு தங்கை இருக்கினமாம் ஒருவர் மாற்றுதிறனாளியாம் தங்கையை பார்க்க வேண்டிய முழு பொறுப்பும் இவர் கையில் தான். ஜெயாவுக்கு அன்று சம்பளம் அவனது அண்ணா தனது சம்பளத்தில் வீட்டு வாடகையும், பிரான்ஸ் வந்த கடனையும் கட்டிவிடுவான். ஜெயா வீட்டின் செலவுக்குப் போக தனக்கும் அண்ணாக்குக்கு சம்பளப் பணத்தில் சிறிதளவு சேமிப்பாகவும் வைத்திருப்பான்.

கமலன் அண்ணாவின் நலம் விசாரிக்க அவனும் அண்ணாவும் விடுமுறையான செவ்வாய்க்கிழமை அன்று புறப்பட்டார்கள். கமலன் அண்ணா வீட்டிற்கு வந்ததும் நிம்மதியாக இருந்தது. நடுங்கும் குளிரில் இருபக்கமும் ஐஸ் குமியலாக நிதானமாக வாடகை காரில் பயணமானோம். மிகவும் சிரமப்பட்டே வந்து சேர்ந்தோம். வீட்டிற்குள் சூடாக இருந்தபடியால சமாளித்தோம். கட்டிலில் கமலன் அண்ணா படுத்திருந்தார். என்னையும் அண்ணாவையும் கண்டதும் அழுதார். அவருக்கு ஆறுதல் சொல்ல முடியவில்லை. நாம் வீசா இல்லாமல் வேலைக்காக படும் வேதனை ஒருபக்கம் என்றால் உயிரே போகும் குளிர் மறுபக்கம் என்ன வாழ்க்கையோ. 'ஜெயா என்ன பலமான யோசனை' கேட்ட குரலாச்சே என்று திரும்பிப் பார்த்தால் தேவா, அண்ணா வீட்டிற்குள் வந்தார். 'வாங்க தேவா அண்ணா கமலன் அண்ணா இப்படி போர்வைக்குள் இருப்பது தான் கவலையாக இருக்கு வைத்தியரிடம் கூட்டி போவமா' 'இல்ல ஜெயா அவருக்கு இரண்டு நாளில் சரியாகும் இது வழமை தானே' என்று கூறி விட்டு சேபாவில் அண்ணாவுக்கு அருகில் அமர்ந்தார்.

சிறிய மௌனத்திற்குப் பின் அண்ணா பேச தொடங்கினான் 'கமலன் இங்கு ஏதும் யாரும் சீட்டு பிடிப்பினமா சீட்டுக்கு ஆட்கள் சேர்த்தால் சொல்லுங்க நானும் ஜெயாவும் ஆளுக்கொரு சீட்டு பிடிக்க எண்ணியுள்ளோம்'

ஐயோ சாமி இந்த வேண்டாத வம்புக்கு நான் வரல' போர்வைக்குள்ளிருந்த கமலன் அண்ணா பதறினார்.

காரணம் வினாவுவதைப் போல இருவரும் அவரை பார்க்க சீட்டு பிடிப்பாங்க கடைசியாக சீட்டு கட்டின ஆளையே ஏமாத்தி ஓடி போயிடுவினம் அவன் படாத பாடு பட்டு பணத்தை இவங்களுக்கு கட்டிட்டு கடைசியில வடை பறி போன கதையாக கண்ணீருடன் பல பேர் வாய்விட்டு சொல்ல முடியாமல் பெரும் அவதிக்குள்ளாகி இருக்கினம், பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் தேவாவும் தான்' என்றார். 'ஏன் மனிதர்கள் சிலர் இப்படி சுயநலமாய் வாழ்கின்றார்கள். எல்லாரும் கஷ்டப்பட்டுத் தானே உழைக்கிறாங்க. பிறகேன் மற்றவர்களின் பணத்தில் இந்த வாழ்க்கை தேவைதானா என்ன வாழ்க்கையடா' ஜெயா அலுத்துக் கொண்டான்.

'இரண்டு வேலைக்கு போனால் தான் எல்லாத்தையும் சமாளிக்க முடியும்.. சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாக நாம் உழைத்த பணத்தை சீட்டு என்ற பெயரில் ஏமாற்றும் கும்பலிடம் கொடுத்துட்டு வானத்தை பார்த்து அழ வேண்டியது' என்று தேவா அண்ணா தனது ஆதங்கத்தை வெறித்த பார்வையுடன் வெளியிட்டார்.

'அண்ணா இனி சீட்டு கதையை கதைக்கவே மாட்டேன்' என்றார். நாட்டில் இருந்திருந்தால் எவ்வளவோ நிம்மதி மழை பெய்தால் மண் வாசனை, வயல் நிலம் பண்ணை வீடுகளின் கால் நடைகள் நடைபோடும் அழகு, குளத்தில் மீன் பிடிக்கும் ஐயா, அண்ணாமாரின் குய்யோ முய்யோ சத்தம், மாட்டு வண்டியின் பவனி, அம்மா அப்பாவின் செல்ல அதட்டல், அக்கா இருவரின் செல்லக் கொஞ்சல் கடைக் குட்டி என்பதால் அளவுக்கதிகம் செல்லம் ராஜா மாதிரி வாழ்ந்த எம்மை தாயகத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டதைப் போல நாதியற்று வாழ்கின்றோம். உறவுகள் இருந்தும் அநாதைகளாக.. கமலன் அண்ணாவின் தலை முடி கொட்டி விட்டதால தலையில எப்பவும் தொப்பியுடன் வலம் வருவார்.இதோ அவரின் பரிதாபக்கதை 'அழகான ஒல்லி பிள்ளையாக பாருங்க அம்மா' என்று கலியாணத்திற்கு ஓம் சொன்னவராம். திருமணமாகி வந்தவுடனே சொன்னவாம் 'நீ வயதானவன் போல இருக்கின்றாய் பிடிக்கல நான் பிரான்ஸ் வரும் வரைக்கும் பொறுத்தன்' என்றாவம்.

'இப்ப எங்கண்ணா மனுசி' என்று ஜெயா கேட்க 'அவ இஷ்டப்படி வாழ அனுப்பியாச்சு' 'தங்கச்சி இருவரையும் அம்மாவையும் நன்றாக பார்த்துக்கணும் வேற எண்ணமே இல்லப்பா அப்பாவும் கலவரத்தில் காணாமல் போனவர் இன்று வரை எதுவும் அறிய முடியல' என்ற போது 'அண்ணா காசு நிறைய செலவழிச்சு கலியாணம் செய்தப்ப அவாவுக்கு தெரியலயோ உங்கட தோற்றம் 'இங்கு பலபேரின் வாழ்க்கை இது தான் போலும் அழகையும் பணத்தையும் அளவிட்டே அனைவரின் வாழ்க்கையும் நகர்கின்றதோ என்றே தோன்றுகின்றது. 'தேவா அண்ணா என்ன சத்தத்தை காணோம்' ஜெயாவின் குரல் கேட்டு குனிந்த தலையை நிமிர்த்தி' புலத்திலிருக்கும் ஒவ்வொருவரின் வாழ்வும் சோகம், சோதனை நிறைஞ்சதே தாயகத்தில் இருப்பவங்க நினைப்பாங்க காசு நிறைய உழைக்கலாம் என்று ஆனால் என்ட குழந்தைக்கு இரண்டு வயதாகும் போது இங்க வந்தன் இப்ப அவனுக்கு ஒன்பது வயது என்ட வீசா பிரச்சினையால மனைவி, மகனை பிரிஞ்சு இருக்குறன் வீசாக்காக எவ்வளவு இழந்துட்டன்' எனும் போது வேதனையாய் என்னுள்ளே...10ஆம் திகதி டான் என்று காசு போடனும் எங்கள் துயரம் எம்முள்ளே புதைத்வர்களாய் வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் முடிவில்லா உழைப்பாளிகளாக புலத்திலிருந்து எம் பயணம் இப்படியே தொடரும்...

> **'நாமளும் இந்த நிலைமைக்கு வர இருபது வருடமாகும் என்ன அண்ணே' சலித்துக்கொண்டே பெருமூச்சை விட்டான் ஜெயா. 'கமலன் அண்ணாவை ஏங்க இன்று காணோம்' 'அவருக்கு குளிர் காலம் என்றாலே வருத்தம் தான்' தேவா அண்ணா சொல்லிக்கொண்டே இட்லித் தட்டில் மாவை ஊற்றினார். காலை ஐந்து மணிக்கு வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்பட்டால் இரவு எட்டு மணிக்குத்தான் வீட்டிற்குப் போகலாம்**



சீனா

# சீனாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: 111 பேர் பலி

சீனாவின் கன்சு-கிங்காய் எல்லைப் பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் திங்கட்கிழமை (19) ஏற்ப்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவு கோலில் 6.1 ஆக பதிவாகி உள்ளதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. கன்சு மாகாண தலைநகரான லான்ஜோவிலிருந்து 102 கிலோ மீற்றர் மேற்கு-தென்மேற்கில் 35 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக சீன நாட்டு தகவல்கள் தெரிவித்துள்ளன.

அந்நாட்டு நேரப்படி நள்ளிரவு 11.59 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் அங்குள்ள கட்டிடங்கள் குலுங்கின. நிலநடுக்கத்தின் தீவிரம் அதிகமாக இருந்ததால் பல கட்டிடங்கள் இடிந்து விழுந்துள்ளன.

இடிந்து விழுந்த கட்டிட இடிப்பாடுகளில் சிக்கி இதுவரை 111 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 230க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளுக்கு மீட்பு பணிகளில் ஈடுபட உடனடியாக அவசர மீட்பு குழுவினர் விரைந்துள்ளனர். சீனாவில் கடும் பனிப்பொழிவு நிலவுவதால் மீட்புப்பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கன்சு, கிங்காய் ஆகிய வடமேற்கு மாகாணங்களுக்கு இடையிலான எல்லையில் இருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாகவுத் சீனாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமாக சின்ஹுவா கூறியுள்ளது. திங்கட்கிழமை நள்ளிரவு மட்டும் வெவ்வேறு இடங்களில் 3 ரிக்டர் அளவில் அடுத்தடுத்து 9 நில அதிர்வுகள் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

எகிப்து

## ஜனாதிபதி தேர்தலில் அல்-சிசி மீண்டும் வெற்றி

எகிப்து ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி அப்தெல் ஃபட்டா அல்-சிசி 3ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்.

எகிப்து நாட்டின் அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த 10ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெற்றது. அதன் முடிவுகள் திங்கட்கிழமை (18) அறிவிக்கப்பட்டன.

அதன்படி, அல்-சிசிக்கு ஆதரவாக 89.6 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அதையடுத்து, எகிப்து நாட்டின் ஜனாதிபதியாக அவர் 3ஆவது முறையாக பதவியேற்கவிருக்கிறார்.

மேற்கத்திய நாடுகளுடன் நெருங்கிய நட்புறவைப் பேணி வரும் அல்-சிசி, மனித உரிமை மீறல்களிலும், அரசியல் எதிரிகளை நசுக்கும் செயலிலும் ஈடுபட்டு வருவதாக விமர்சிக்கப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாட்டிகன்

## தன்பாலின தம்பதிகளுக்கு ஆசீர்வாதம் வழங்க அனுமதி



தன்பாலின தம்பதிகளுக்கு ஆசீர்வாதம் வழங்குவதற்கு போப் பிரான்சிஸ் முறைப்படி அனுமதி அளித்துள்ளார்.

வாட்டிகனின் கொள்கையில் மாற்றங்கள் என்ற புதிய ஆவணத்தில், கடவுளின் அன்பையும், கருணையையும் பெற விரும்பும் மக்களை தடுக்கக் கூடாது என்ற நோக்கில் தன்பாலின தம்பதிகளுக்கு ஆசீர்வாதம் வழங்குவதற்கு போப் பிரான்சிஸ் முறைப்படி அனுமதி அளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாட்டிகன் அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட இந்த ஆவணத்தில், “திருமணத்தில் சில சடங்குகளைக் குழப்பாமல் இருந்தால் தன்பாலின தம்பதிகளுக்கு பாதிரியார்கள் ஆசீர்வாதம் வழங்கலாம் என்று கூறியுள்ளார்.

சென்னை

# முருகனை லண்டனுக்கு அனுப்ப மறுப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருந்த நளினி, முருகன், சாந்தன் உட்பட ஏழு பேரை 2022ஆம் ஆண்டு விடுதலை செய்ய நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதையடுத்து விடுதலை செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த முருகன், சாந்தன் உள்ளிட்டோர் அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். இந் நிலையில், லண்டனில் வசிக்கும் தன் மகளுடன் சோர்ந்து வாழ விரும்புவதால், கடவுச்சீட்டு கேட்டு விண்ணப்பிப்பதற்காக திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்துக்குச் சென்று வருவதற்கு பாதுகாப்பு வழங்க, சென்னை பொலிஸாருக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் முருகன் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதிகள் கிருஷ்ணகுமார் தனபால் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய அரசு தரப்பில் கூடுதல் சொலிசிடர் ஜெனரல் ஏ.ஆர்.எல். சுந்தரேசன் ஆஜராகி, கொலை வழக்கில் குற்றவாளியான இலங்கையைச் சேர்ந்த முருகனை லண்டனுக்கு அனுப்ப முடியாது எனவும், இலங்கை நாட்டின் துணை தூதரகம் ஆவணங்களை வழங்கினால் மட்டுமே அந்த நாட்டுக்கும் திருப்பி அனுப்ப முடியும் என்றும் தெரிவித்தார்.

தமிழக அரசு தரப்பில், திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு முருகனை அழைத்துவர காவல்துறை பாதுகாப்பு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனை பதிவுசெய்துகொண்ட நீதிபதிகள், முருகனுக்குப் பயண ஆவணம் வழங்குவதற்கான நேர்காணலுக்கு இலங்கை தூதரகம் அழைக்கும்போது, முருகனுக்குப் பாதுகாப்பு வழங்க உத்தரவிட்டு, வழக்கை முடித்துவைத்தனர்.



நெல்லை

## அதிசய கிணறு

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே முதுமொத்தன்மொழி ஊராட்சியில் உள்ளது ஆயன்குளம் அதிசய கிணறு. ஒவ்வொரு மழை, வெள்ளப்பெருக்கின்போது பல ஆயிரம் கனஅடி உபரி நீர் இந்த கிணற்றுக்கு அனுப்பப்படும்.

ஆனால், அந்த கிணறு மட்டும் நிரம்பி வழிந்ததே இல்லை என்கிறார்கள். இது அதிசயம் என கூறி வந்தனர். இந்த அதிசய கிணறு தொடர்பில் ஆராய்வதற்கு ஐ.ஐ.டி. பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.





ஐ.பி.எல்: வரலாற்றில் இல்லாதளவு

# 24.75 கோடி இந்திய ரூபாய்களுக்கு ஏலம் போன ஸ்டார்க்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு-20 தொடரான இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) அடுத்தாண்டுத் தொடருக்கான ஏலமானது நேற்று நடைபெற்ற நிலையில், வரலாற்றில் இல்லாத வகையில் 24.75 கோடி இந்திய ரூபாய்களுக்கு அவுஸ்திரேலியாவின் வேகப்பந்துவீச்சாளர் மிற்செல் ஸ்டார்க்கை கொல்கத்தா நைட் றைடர்ஸ் ஏலமெடுத்தது.

இதேவேளை அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் பற் கமின்ஸை 20.50 கோடி இந்திய ரூபாய்களுக்கு சண்றைசர்ஸ் ஹைதரபாத் வாங்கியிருந்தது.

இந்நிலையில் இலங்கையின் வேகப்பந்துவீச்சாளர் டில்ஷான் மதுஷங்கவை 4.6 கோடி இந்திய ரூபாய்களுக்கு மும்பை இந்தியன்ஸ் ஒப்பந்தம் செய்தது.

தவிர சகலதுறைவீரர் வனிடு ஹஸரங்கவை 1.5 கோடி இந்திய ரூபாய்களுக்கு சண்றைசர்ஸ் கைச்சாத்திட்டது.

இதேவேளை, நியூசிலாந்தின் சகலதுறைவீரரான டரைல் மிற்செல்லை 14 கோடி இந்திய ரூபாய்களுக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் ஏலமெடுத்தது.

இந்நிலையில், இந்தியாவின் வேகப்பந்துவீச்சாளர் ஹர்ஷான் பட்டேலை 11.75 கோடி இந்திய ரூபாய்களுக்கு பஞ்சாப் கிங்ஸ் ஒப்பந்தம் செய்திருந்தது.





வயம்ப பல்கலைக்கழக கராத்தே:

# புத்தள மாணவர் பிரகாசிப்பு

■ எம்.யூ.எம். சனூன்

வயம்ப பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற கராத்தே போட்டியில் புத்தளத்தை சேர்ந்த மாணவர் வெற்றி பெற்றுள்ளனர்.

21 வயதுக்குட்பட்ட காத்தா மற்றும் குமித்தே ஆகிய இரண்டு போட்டிகளிலும் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி பழைய மாணவர் ஏ.எம்.அஸாம் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை பெற்றுள்ளார்.

14 வயதுக்பட்ட குமித்தே போட்டியில் மதுரங்குளி எக்ஸெலன்ஸ் ஆங்கில பாடசாலையில் கல்வி பயிலும் மாணவன் யூ.தாமீர் தங்கப் பதக்கத்தையும், புத்தளம் காஸிம் சிட்டி பாடசாலை மாணவன் மாஷின் அஹ்மத், 15 வயதுக்குட்பட்ட குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

இந்த மாணவரை “டபில்யூ.எஸ்.கே.ஏ” கழகத்தின் கராத்தே பிரதான போதனாசிரியரான சிஹான் எம். பைரோஸ் பயிற்றுவித்திருந்தார்.

கண்டி திருத்துவக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான றக்பி:

# சம்பியனான ஊர்லோப் இல்லம்

■ அஸ்ஹர் இப்றாஹீம்



கண்டி புனித திருத்துவக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான றக்பி போட்டியில் ஊர்லோப் இல்லம் சம்பியனானது.

20 வயதுக்குட்பட்டவர்களுக்கானதாக நடைபெற்ற இந்த றக்பி இறுதிப் போட்டியில் சென்றல் போடிங் இல்லத்தை வென்றே ஊர்லோப் இல்லம் சம்பியனானது.

இறுதிப் போட்டியில் சிறந்த வீரராக ஊர்லோப் இல்ல மாணவன் ஈவான் ஹுலங்கமுவ தெரிவானார்.



# பார்சிலோனா செல்லும் சஞ்சோ?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவானது, தமது முன்களவீரர் றபின்ஹாவுக்கான கேள்வித் தொகைகளைக் கேட்கத் தயாராகவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், தமது முன்களவீரரான ஜடோன் சஞ்சோவை வழங்குவது உள்ளடங்கலான ஒப்பந்தத்தை 27 வயதான றபின்ஹாவுக்காக முன்மொழிய இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் தயாராகவுள்ளதாகக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 20 டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.